# பதினெண் கீழ்க்கணக்கு அகநூல்களில் அறத்தொடு நிற்றல்

முனைவர் பெ.சுமதி
*உதவிப்பேராசிரியர் ஒப்பிலக்கியத்துறை*
*தமிழியற்புலம்*
*மதுரை காமராசர் பல்கலைக்கழகம், மதுரை – 625 021*

**முன்னுரை**

சங்கம் மருவிய கால நூல்கள் என்றழைக்கப்படும் பதினெண்கீழ்க்கணக்கு நூல்களில் ஆறு நூல்கள் அகம் பற்றி கூறுகின்றன. ஐந்திணை ஐம்பது, ஐந்திணை எழுபது, திணைமொழி ஐம்பது, திணைமாலை நூற்றைம்பது, கைந்நிலை, கார் நாற்பது ஆகிய ஆறு நூல்களும் சங்க இலக்கியப் பாடல்களை சுருங்கிய வடிவில் தருகின்றன. அறத்திற்கு முக்கியத்துவம் கொடுக்கப்பட்ட காலத்தில் அகத்திற்கும் முக்கியத்தும் கொடுக்கப்பட்டதை அக நூல்களின் தோற்றம் குறிப்பிடுகின்றன. தமிழர்களின் பண்பாட்டின் தனித் தன்மையைப் பறைசாற்றுவதற்குக் காரணம் அக இலக்கிய மாந்தர்கள் இயற்பெயர் சுட்டப் பெறாமல் பொதுப் பெயரால் சுட்டப் பெறும் மரபு என்பது குறிப்பிடத்தக்கது. குறிஞ்சிக்கு புணர்தலும் புணர்தல் நிமித்தமும், முல்லைக்கு இருத்தலும் இருத்தல் நிமித்தமும், மருதத்திற்கு ஊடலும் ஊடல் நிமித்தமும், நெய்தலுக்கு இரங்கலும் இரங்கல் நிமித்தமும், பாலைக்குப் பிரிதலும் பிரிதல் நிமித்தமும் என்று அக மாந்தர்களின் வாழ்க்கையில் உரிப்பொருள்கள் கட்டமைக்கப்படுகின்றன. அதில் அறத்தொடு நிற்றல் ஆராயப்படுகின்றது.

**அகத்திணை மரபு**

சங்க அக இலக்கியத்திற்குரிய தனிச்சிறப்பு மாந்தர்களின் இயற்பெயர் சுட்டப்பெறாமையாகும்.

> **“மக்கள் நுதலிய அகன்ஐந் திணையும்**
> **சுட்டிஒருவர்ப் பெயர்கொளப் பெறாஅர்.” (தொல்.அகத்.57)**

என்ற தொல்காப்பிய நூற்பாவிற்கு இளம்பூரணர்,

**“அகன் மக்கள் நுதலிய ஐந்திணையும் அகத் திணையுள் கைக்கிளை பெருந்திணை ஒழிந்த ஐந்திற்கும் உரிய வாகிய நிலமும் காலமும் கருப்பொருளுமன்றி மக்களைப்பற்றி வரும் புணர்தலும் பிரிதலும் இருத்தலும் இரங்கலும் ஊடலும் என்று சொல்லப்பட்ட ஐந்து பொருண்மையும், சுட்டி ஒருவர் பெயர் கொளப்பெறார் (அவ்வைந்திணைக் கண்ணும் தலை மகனாகப் புலனெறி வழக்கம் செய்ய வேண்டின்) நாடன் ஊரன் சேர்ப்பன் என்னும் பொதுப்பெயரானன்றி ஒருவர்க்கு உரித்தாகி வரும் பெயர் கொள்ளப்பெறார் புலவர்.” (தொல்.பொருள், இளம்பூரணர் உரை.ப.71)** என்று கூறுகின்றார்.

மேலும்,

> **“புறத்திணை மருங்கின் பொருந்தின் அல்லது**
> **அகத்திணை மருங்கின் அளவுதல் இலவே.” (தொல்.அகத்.58)**

என்பதற்கு,

> **"புறத்திணை மருங்கின் பொருந்தின் அல்லது ஒருவர் பெயர் புறத்திணை மருங்கிற் பொருந்தினல்லது, அகத்திணை மருங்கின் அளவுதல் இல அகத்திணை மருங்கின் வருதல் இல்லை. (ஏகாரம் ஈற்றசை). இதனாற் சொல்லியது ஒருவர்க்குரித்தாகி வரும்பெயர் அகத்திணை பற்றி வரும் கைக்கிளை பெருந்திணையினும் வரப் பெறாது என்பதூஉம், புறத்திணையுள் வரும் என்பதூஉம், ஆண்டும் பாடாண் பாட்டுக் காமம் பொருளாக வரின் அவ்வழி வரூஉம் என்பதூஉம் கூறியவாறு. இதனான் அகப்பொருள் ஒருவரைச் சாராது பொதுப்பட வருமென்பது கொள்க."** (தொல்.பொருள், மு.நூ.ப.71)

என்று இளம்பூரணர் அகத்திணையில் பெயர் சுட்டப்பெறாது என்பதை குறிப்பிடுகின்றார்.

**களவு மணம்**

தலைவன், தலைவி தாமாகவே எதிர்பட்டு காதல் வயப்பட்டு வாழும் வாழ்க்கை களவு மணம் என்பதை,

> **"களவு மணமாவது பெற்றார் உற்றார் உறவினர் அறியாமல் ஒரு ஆணும் ஒரு பெண்ணும் மறைவிலே மணமக்களாக வாழ்க்கை நடத்துவர் ஒத்த தன்மையுள்ள ஒரு ஆணும் பெண்ணும் சந்திக்கும் போது அவர்களுக்குள் காதல் பிறக்கும் அவர்கள் இருவரும் ஒரே நிலத்தில் வாழக் கூடியவர்களாகவும் இருக்கலாம். வேறு வேறு நிலத்து மக்களாகவும் இருக்கலாம். முன் வினைப்பயனாகவே இருவரும் சந்திப்பார்கள். அவர்கள் இருவரும் மனமொத்துக் காதலித்து இன்புறுவர். இவர்கள் அடிக்கடி இரவிலும் பகலிலும் குறித்த இடத்திலே சந்திப்பார்கள். இப்படி ஊரார் அறியாமல் - உறவினருக்குத் தெரியாமல் நடத்தும் வாழ்வே களவு மணம்" (சாமி. சிதம்பரனார். தொல்காப்பியத் தமிழர்,ப.26)**

என்று கூறப்படுகின்றது. காதல் வயப்பட்ட தலைவனும் தலைவியும் பாங்கற் கூட்டம் பாங்கியற் கூட்டம், மற்றும் தோழியின் மூலமாக பகல் குறி, இரவுக் குறி என்று சந்தித்துக்கொள்வது களவு மணம் என்பதாகக் கூறப்படுகின்றது.

**கற்பு மணம்**

களவு வாழ்க்கை அலராகி பெற்றோர்களுக்கு தெரிந்து தோழியின் மூலம் தலைவி விரும்பும் தலைவனுக்கு திருமணம் செய்து வைப்பது கற்பு மணம் என்றழைக்கப்படுகின்றது.

கற்பு மணம் பற்றி பல்வேறு விளக்கங்கள் கொடுக்கப்படுகின்றன.

> **"களவுச் செய்தி பெண்ணின் பெற்றோர்கதுத் தெரிந்து விட்டால் அவர்கள் பெண்ணை வீட்டை விட்டு வெளியியே போக வொட்டாமல் அடக்கிவிடுவார்கள். அப்பொழுது அவளுடன் கூடி மகிழ்ந்த ஆடவன் தன் உறவினரைக் கொண்டு பெண்ணின் பெற்றோரிடம் பெண் கேட்கச் செய்வான். அவர்களும் சம்மதிப்பார்கள். ஏற்கனவே மணமக்களாக மறைந்து வாழ்ந்த அந்த இருவருக்கும் சில சடங்குகளுடன் திருமணம் நடைபெறும். பின்னர் வெளிப்படையாக இருவரும் இல்லறம் நடத்துவார்கள். இதற்கே கற்பு மணம் என்று பெயர். இது களவு மணம் ஊரார்க்குத் தெரிவதற்கு முன்பே நடைபெறும் கற்பு மணமாகும். ஒரு பெண்ணும் ஆணும் நடத்தும் களவு மண வாழ்க்கை ஊரார்க்குத் தெரிந்துவிட்டாலே போதும் அதன் பிறகு அவர்கள் வெளிப்படையாக இல்லறத்திலேயே இணைந்து வாழ்வார்கள். இதுவும் கற்பு மணமே தான். காதலன், தான் காதலித்து வாழும் பெண்ணை ஒருவரும் அறியாமல் தன்னூர்க்கு அழைத்துக் கொண்டு போய்விடுவான்.**

**தன்னூரிலே வெளிப்படையாக, யாவரும் அறிய இல்லறம் நடத்துவான். தன்னூரை அடைந்தவன் சில சடங்குகளுடன் திருமணம் செய்து கொள்வதும் உண்டு. பெண்ணிண் பெற்றோர்களும் இத்திருமணச் சடங்கிலே கலந்து கொள்வதும் உண்டு. இம்முறையிலே காதலன், காதலிகளின் களவு வெளிப்பட்டு இருவரும் இல்லறம் நடத்துவதும் கற்பு மணமே தான்.” (சாமி. சிதம்பரனார். தொல்காப்பியத் தமிழர்,ப.27)**

களவு வாழ்க்கையில் ஈடுபட்ட தலைவன், தலைவி வாழ்க்கையில் தலைவி இற்செறிக்கப்பட்ட நிலையில் தலைவியை பெண் கேட்டு மணந்து கொள்வது, களவு வாழ்க்கை அலராகிய பிறகு இல்லறத்தில் இணைவது, உடன் போக்கு கொண்டு மணப்பது என்று கற்பு மணம் பற்றி கூறுவது குறிப்பிடத்தக்கது.

**அறத்தொடு நிற்றல்**

அறம் என்பது மனிதர்களின் நற்பண்புகளைக் குறித்தாலும் அறத்தொடு நிற்றலில் அறம் பெண்களின் கற்பையே குறிக்கின்றது என்பதை,

**“அறம் எனப்படுவது பல பண்புகளையும் தழுவியப் பொதுச் சொல்லாயினும், ஈண்டு பெண்ணுக்கு உரிய முதற் பண்பானக் கற்பையே குறிக்கும். கற்பென்னும் கடைப்பிடியில் நின்று களவொழுக்கத்தைப் பெற்றோருக்கு வெளிப்படுத்துதல் என்பது இத்துறையின் பொருள்” (வ.சுப.மாணிக்கம், தமிழ்க் காதல்.2009:68)** என்று வ.சுப.மாணிக்கம் குறிப்பிடுகின்றார்.

தலைவியின் களவு வாழ்க்கையை கற்பு வாழ்க்கையாக மாற்றுவதற்கு நடைபெறும் செயல் என்பதை,

**“அறத்தொடு நிற்றல் என்பது, தலைவன் தலைவியரிடையே தோன்றிய களவொழுக்கம் பிழையாது, மணப்பதனால் கற்பொழுக்கமாக மாற உதவும் வகையில், அக்களவினைத் தலைவி தோழியிடமும், தோழி, செவிலியிடமும், செவிலி நற்றாயிடமும், நற்றாய் தந்தை தனையரிடமும் முறையாக வெளிப்படுத்துவதாகும். களவு, கற்பாக மாற வேண்டியது அறமாதலின், அதனை, உரியவரிடம், உரிய நேரத்தில், உரிய வகையில் வெளிப்படுத்தும் செயல் அறத்தொடு நிற்றல் எனப்பட்டது.” (இரா.செயபால்,(உ.ஆ.)அகநானூறு, 2004:142)** என்று அறத்தோடு நிற்றல் குறிப்பிடப்படுகின்றது.

தலைவயின் களவு வாழ்க்கையை தோழி செவிலிக்கு வெளிப்படுத்தி அறத்தொடு நிற்கின்றாள்

**“கள்ளி கனைநீலஞ் சோபா லிகைசெயலை**
**யள்ளி யளகத்தின் மேலாய்ந்து தெள்ளி**
**யிதணாற் கடியொடுங்கா வீர்ங்கடா யானை**
**யுதணாற் கடிந்தா னுளன்” (திணைமாலை நூற்றைம்பது.2)**

ஒரு உயிரைக் காப்பது பேரறமாகக் கருதி, பரணில் தன் உயிரைக் காத்துக் கொள்ள முடியாத நிலையிலிருந்த தலைவியைத் தாக்கவந்த யானையை தன் அம்பினால் எய்து அவற்றை விலகி போக செய்து காப்பாற்றினான் பின்பு அனிச்சமலர்கள் நீலோற்பவ மலர்கள் ஒளிமிக்க அசோக மலர்களை பறித்து வந்து தலைவியின் கூந்தலில் மிக அழகாகப் புனைந்தவன் ஒருவன் தலைவியின் உள்ளத்தில் இருக்கின்றான் என்று கூறி தோழி, செவிலிக்கு அறத்தொடு நிற்கின்றாள். தலைவியின் உடல் வேறுபாட்டை அறிந்து வேலன் வெறியாட்டு

நடைபெறுகின்ற சூழலில் தலைவியின் உடல் வேறுபாட்டிற்குக் காரணம் வேலன் இல்லை தலைவன் என்பதை தோழி செவிலிக்கு உணர்த்தி அறத்தொடு நிற்பால் என்பது குறிப்பிடத்தக்கது.

தலைவியின் உயிரை தினைப்புனத்தில் காப்பாற்றியன் இருக்கின்றான் என்பதை தோழி, செவிலிக்கு வெளிப்படுத்தி அறத்தொடு நிற்கின்றாள்.

**"வருக்கை வளமலையுண் மாதரும் யானு**
**மிருக்கை யிதண்மேலே மாகப் பருக்கைக்**
**கடாஅமால் யானை கடிந்தானை யல்லாற்**
**றெபடா அவா லென்றொழி தோள்."** **(திணைமாலை நூற்றைம்பது.14)**

வருக்கைப் பலா மரங்கள் நிறைந்த மலையிடத்தில் தினைப்புனத்தில் பரணின் மேல் இருக்கின்ற நிலையில் பருத்த துதிக்கையையுடைய மதம் கொண்ட யானையிடமிருந்து எங்களையும் காப்பற்றியவன் அக்காளை போன்றவனை தவிர வோறொருவனை என் தலைவியின் தோள்கள் தீண்டாது என்று தலைவியின் களவுக்கு காரணமானவன் தலைவன் என்பதைதோழி செவிலிக்கு கூறுகின்றாள். தலைவியின் உயிரை காப்பாற்றிய தலைவனுக்கு தலைவியை மணமுடித்து தரவேண்டும் என்பதை நயம்பட எடுத்துக்கூறி தோழி, செவிலிக்கு அறத்தொடு நிற்கின்றாள்

தலைமகன் சான்றோரை திருமணம் பேசி வருமாறு தலைவியின் இல்லத்துக்கு அனுப்பிவைக்கின்ற சூழலில் தலைவியின் தந்தைக்கும் தன்னையன்மார்க்கும் நற்றாய் அறத்தொடு நிற்கின்றாள்.

**"வாடாத சான்றோர் வரவெதிர் கொண்டிராய்க்**
**கோடாது நீர்கொடுப்பி னல்லது கோடா**
**வெழிலு முலையு மிரண்டிற்கு முந்நீர்ப்**
**பொழிலும் விலையாமோ போந்து."** **(திணைமாலை நூற்றைம்பது. 15)**

தலைவன் அனுப்பிய சான்றோர்களின் வரைவு வேண்டிய செயலை ஏற்றுக்கொண்டவர்களாகத் திருமணத்தில் பெண்ணை நீர்வார்த்துக் கொடுத்தலைத் தவிர தம் மகளின் கண்ணழகிற்கும் மார்பிற்கும் கடலால் சூழப்பட்ட இவ்வுலகத்தையே விலையாகாக் கொடுத்தாலும் அது கொள்ளத் தகுமா? என்று நற்றாய் தந்தைக்கும் தன்னையன்மார்களுக்கும் அறத்தொடு நிற்கின்றாள். தலைவனைத் தவிர மற்ற ஆடவனுக்கு தலைவியை திருமணம் செய்து கொடுப்பது முறையாகது என்பதை நற்றாய் தன் கணவனுக்கும் பிள்ளைகளுக்கும் குறிப்பாக உணர்த்தி அறத்தொடு நிற்கின்றாள்.

நொதுமலர் வரைவு வேண்டு தலைவியின் இல்லத்திற்கு வந்த பருவத்து தோழி, செவிலிக்கு அறத்தொடு நிற்கின்றாள்.

**"தந்தார்க்கே யாமாற் றடமென்றோ ளின்ளறாள்**
**வந்தார்க்கே யாமென்பார் வாய்காண்பாம் வந்தார்க்கே**
**காவா விளமணற் றண்கழிக் கானல்வாய்ப்**

**பூவா விளஞாழற் போது" (திணைமாலை நூற்றைம்பது.39)**

கடற்கரை சோலையிடத்து அப்போது பூத்த இளமையான கோங்கம் பூவினை பறித்து என் கையில் கொடுத்து சென்ற தலைவனுக்கும் தலைவிக்கும் மெல்லிய தோள்கள் தகுதியுடையன. இப்பொழுது வந்தவர்களின் வாய்மொழியின் உறுதித் தன்மையை உண்மை என்று எவ்வாறு அறிவது என்று கூறி தோழி, செவிலிக்கு அறத்தோடு நிற்கின்றாள். தலைவனைத் தவிர தற்பொழுது மணம் பேசி வந்திருப்பவர்களின் வாய்மொழியைக் கேட்டு தலைவியை திருமணம் செய்து கொடுக்கக் கூடாதென்பதை தோழி செவிலிக்கு உணர்த்துகின்றாள்.

தலைவிக்கு அழகுபடுத்தி அடியிலிருந்து முடிவரை பார்த்து இவளுக்கு பொருத்தமானவன் யார் என்று செவிலி கேட்கின்ற பொழுது தோழி, செவிலிக்கு அறத்தொடு நிற்கின்றாள்.

**"வில்லார் விழவினும் வேலாழி சூழலகி**
**னல்லார் விழவகத்து நாங்காணே நல்லாய்!**
**உவர்க்கத் தொரோவுதவிச் சேர்ப்பனொப் பாரைச்**
**சுவர்க்கத் துளராயிற் சூழ்." (திணைமாலை நூற்றைம்பது.62)**

விற்போரில் சிறந்தவர்கள் கூடும் வில்விழா கூட்டத்திலும், மணவிழா நடக்கும் இடத்திற்கும், கடற்கரையிலும் இவளுக்கு ஒப்பற்ற உதவிகளைச் செய்த கடற்கரை சேர்ப்பனை ஒத்த ஆடவர்களை நாங்கள் காணவில்லை, தலைவிக்கு பொருத்தமானவன் சேர்பனே ஆவான். அவனை அன்றி அவனைப் போல ஒருத்தனை தேட வேண்டுமென்றாள் சொர்க்கத்தில் உளராயின் தேடிக்கொள்க என்று தோழி செவிலிக்கு அறத்தொடு நிற்கின்றாள். தலைவிக்கு பொருத்தமுடையவன் தலைவனாகிய சேர்ப்பனே தவிர, தேவலோகத்திலும் அவனைப் போன்ற ஒருத்தனை கண்டறிய முடியாது என்று தோழி, தலைவனின் பெருமைகளை செவிலிக்கு எடுத்துக் கூறி அறத்தொடு நிற்கின்றாள்.

**முடிவுரை**

பதினெண் கீழ்க்கணக்கு அக நூல்களில் சங்க அக இலக்கிய கட்டமைப்புக் காணப்படுவது குறிப்பிடத்தக்கது. சங்க இலக்கியத்தில் அக மாந்தர்கள் இயற்பெயர் சுட்டாமல், பொதுப்பெயரால் அழைக்கப்படுவது தனிச் சிறப்பாகும். குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை என்ற ஐந்து நிலங்களின் அடிப்படையில் சங்க அகமாந்தர்களின் வாழ்வியல் கட்டமைக்கப்பட்டு அதில் உள்ள ஒழுக்கங்கள் மரபாகப் போறப்படுகின்றது. தலைவியின் களவு வாழ்க்கையை கற்பு வாழ்க்கையாக மாற்ற வேண்டும் என்ற எண்ணத்தில் தோழி செவிலியிடம் அறத்தொடு நிற்கின்றாள். செவிலி நற்றாயிடமும் நற்றாய் தந்தையிடமும் அறத்தொடு நின்று தலைவி விரும்பிய தலைவனுக்கு திருமணம் முடித்துக் கொடுப்பதற்கான நிகழ்வுகள் நடைபெறுகின்றன. தலைவன், தலைவியின் களவு வெளிப்பட்ட பின்பு அறத்தொடு நிற்பர் அல்லது உடன் போக்கு மேற்கொள்வர், இதுவே களவு வாழ்க்கையின் இறுதி பகுதியாகும் என்று கூறப்படுகின்றது. தலைவியின் களவு வாழ்க்கையை கற்பு வாழ்க்கையாக்குவதற்கு தோழி மேற்கொள்ளும் முயற்சிகளில் அறத்தோடு நிற்றல் குறிப்பிடத்தக்கதாகும். சங்க காலப் பெண்கள் போன்றே சங்க மருவிய காலப் பெண்கள், தான் விரும்பிய தலைவனையே மணக்க வேண்டும் என்ற குறிக்கோளுடைய பெண்களாக கற்பு நிலை தவறாதப் பெண்களாக வாழ்ந்தவர்கள் என்பதிலிருந்து பெண்களின் சிறப்புகளை அறியமுடிகின்றது.

**பயன்பட்ட நூல்கள்**

[1] இளம்பூரணர்(உ.ஆ)., தொல்காப்பியம், திருநெல்வேலி தென்னிந்திய சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம், சென்னை. 1953
[2] சிதம்பரனார்.சாமி. தொல்காப்பியத் தமிழர், நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், சென்னை. ஆகஸ்ட்.2008
[3] நடராஜபிள்ளை.அ(உ.ஆ) திணைமாலை நூற்றைம்பது, திருநெல்வேலி தென்னிந்திய
[4] சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம், சென்னை.2007
[5] மாணிக்கம்.வ.சுப தமிழ்க் காதல், மெய்யப்பன் பதிப்பகம், சிதம்பரம்.2007
[6] ஜெயபால்.இரா.(உ.ஆ) அகநானூறு, நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், சென்னை. 2004